**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.**

2023–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ஆம் நாள் திங்கட்கிழமை
(2054– திருவள்ளுவராண்டு – சோபகிருது வருடம் ஐப்பசி 13 ம் நாள்)

**அ.வ.எண். 182/2018**

**CNR.NO.TNTI14-000202-2018**

1. நா.முத்துச்சாமி கவுண்டர்
2. ஜெயலட்சுமி
3. மலர்க்கொடி ...வாதிகள்

/எதிராக/

1. மாவட்ட ஆட்சியர், திருப்பூர்
2. வருவாய் கோட்டாட்சியர், தாராபுரம்
3. வருவாய் வட்டாட்சியர், காங்கயம் ...பிரதிவாதிகள்

இன்று இந்த வழக்கு என் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.என்.பழனிச்சாமி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், வாதிகள் அழைக்கப்பட்டும் வாதிகள் வருகை தவறுகையாலும், சாட்சிய சான்றாவாணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**" தீர்ப்புரை "**

வழக்கு சொத்துக்கள் முழுவதும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென வாதிகளின் சொத்துரிமையை விளம்புகை செய்ய வேண்டியும், வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து வாதிகளுக்குள்ள தனித்த அமைதியான சுவாதீனத்திற்கு பிரதிவாதிகளோ, பிரதிவாதிகளின் அலுவலக ஆட்களோ எவ்விதத்திலும் தடையும் இடைஞ்சலும் குறுக்கீடும் செய்யாது இருக்கும் பொருட்டு பிரதிவாதிகளின் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டியும், வழக்குச் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளின்

அலுவலக ஆவணங்களில் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு என்பதனை ரத்து செய்தும் (to revoke) முன்பு இருந்தது போல் ரயத்துவரி புஞ்சை பூமிகள் என (as patta lands ) திருத்தம் செய்து கொள்ளவும், பிரதிவாதிகளின் பேரில் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டியும், இவ்வழக்கின் செலவு தொகையினை வாதிகளுக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும் படிக்கும், இன்னும் இவ்வழக்கின் தன்மைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு சமூகம் கோர்ட்டார் உசிதம் போல் வாதிகளுக்கு வேறு இதர பரிகாரங்கள் வேண்டியும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff absent. No representation. APC not filed. Amendment not carried out. Sufficient opportunities given. But the plaintiffs not turned up to proceed with the case. Hence this case dismissed for default. No cost.

இத்தீர்ப்புரை என்னால் 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/-திருமதி.கே.எஸ்.மாலதி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.